# பணிநிறைவு காண்பவருக்கு வாழ்த்து!

நாள்: 30-06-2023

திரு **பிரபாகரன்,**
தெள்ளுதமிழ் சூடி திரளாக அன்பில் நிறைந்து,
எள்முனையும் நோகா வண்ணம் இயல்புடன்,
கள்ளமில்லா சிரிப்பை ஈந்தும் சீர் **பிரபாகரன்,**
கொள்ளுமோர் பணிநிறைவு இன்றே யன்றோ!

மருவிலா அன்பின் கேள்வன் மகிழ்வுடன்,
அருந்தவப் பணியில் நிறைந்து அடுத்த,
உருபெறும் புதிய கலனாய் கொண்டுயர்ந்து,
அருமைசீர் மக்கள் மனையாளோடும்,

பிணியில்லா வாழ்வினோடும் நாளும்,
பிடித்தவை யாவும் செய்து மண்ணகத்தில்,
தொடுத்திடும் சீர்தொண்டால் மகிழ்ந்திட,
அடுத்ததாய் அன்பில் நிறையும் வாழ்வே!





திரு **பரணிதரன்**
போர்முனைப் பாடல் சூடும் பரணியைபோல்,
போர் இன்றி களம் கண்ட ஆட்ட வீரன்,
சீர்கொண்டு சுங்கம் தன்னில் பணியுமாகி,
ஆர்வமாய் பந்தாட்ட வீரராம் **பரணிதரன்,**

ஆண்டுகளைக் கடந்து இன்று பணிநிறைவு!
வேண்டுமாம் இன்பம் யாவும் சூழ்ந்திட,
காண்பதற்கரிய கருத்தால் மனமும் கூடி,
மாண்புடன் வாழ்க யாவிலும் நிறைந்தே!

திரு **கணபதி**
**கணபதி** என்றிட கலக்கம் நீங்கிடும்!
குணநிதி என்னும் குன்றாம் மனத்தால்!
மணக்கும் அன்பின் மருவிலா சீலன்!
அணைக்கும் பணிநிறைவு இன்றே யாமோ!

ஆண்டால் நிறைந்து அகவையும் சூடி,
மாண்புடன் இனிமேல் புதிய பயணம்!
காண்பதற்கரிய கனவுகள் நிரம்பிட,
மூண்டதாம் உறவில் முகிழ்ந்தே நின்று,

பிணியிலா வாழ்வுடன் பெருமையும் காத்து,
அணியாய் மனைவி மக்களும் அன்புடன்,
துணயாய் நின்றிட தொடருமே இன்பங்கள்!
கனிவுசீர் **கணபதி**க்கு அன்புடனே வாழ்த்து!

